பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 02 வெள்ளிக்கிழமை 18.07.2025 கதிர் 251

## இது ரகசியம் அல்ல!

ஊழலுக்கு எதிர்ப்பு, சிக்கனம் என்றெல்லாம் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த என்பிபியினர் மீது தொடர்ச்சியாக ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுகள் ☞ 2

# அரச பணியாளர்கள் எந்த நிலையிலும் அவதானத்துடன் செயற்படவேண்டும்

## முன்னாள் செயலாளர் அறிவுரை

அரச சேவையாளர்கள் எந்த நிலையிலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இல்லையேல் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னாள் அரசுத் தலைவரின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

அரச அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் சேவையாற்றும் போது எந்நிலையிலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். நான் பல அமைச்சுக்களின் செயலாளராக பதவி வகித்துள்ளேன். அத்துடன் இறுதியில் அரசுத் தலைவர் யின் செயலாளராக சேவையாற்றி ஓய்வுப்பெற்றேன்.

2015ஆம் ஆண்டு அரசுத்தலைவர் தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சியாக செயற்பட்ட தரப்பினர்கள் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாக மக்களுக்கு வாக்குறுதியளித்தார்கள். அந்தத் தரப்பினர் ஆட்சிக்கு வந்தவுடன் கொழும்புதுறைமுகநகரஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டார்கள்.

அச்சந்தர்ப்பத்தில் நான் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளராக இருந்தேன். துறைமுக நகர ஒப்பந்தம் குறித்து அப்போதைய பிரதமரிடம் பேச்சு நடத்தினேன். இந்த ஒப்பந்தத்தை முழுமையாக இரத்துச் செய்யாமல் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ளலாம் என்று குறிப்பிட்டேன். இருப்பினும் துறைமுக நகர ஒப்பந்தம் விடயத்தில் எனக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. ☞ 2

## ஆளும்தரப்பு ஊழல்வாதிகள் மீதும் அநுரகுமார நடவடிக்கை எடுக்கட்டும்

### உதய கம்மன்பில வலியுறுத்து

ஊழல் ஒழிப்புக்கு எதிரான செயற்பாடுகளை ஆளும்தரப்பு முன்னெடுக்குமாயின் தமது ஆளும்தரப்பின் ஊழல்வாதிகளுக்கு எதிராக அரசுத் தலைவர் ☞ 2

## புதிய கல்விச் சீர்திருத்தத்திலும் வரலாறு, அழகியல் பாடங்கள்

### உறுதியளித்து தெளிவுபடுத்தினார் பிரதமர்

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் வரலாறு மற்றும் அழகியல் பாடங்கள் நீக்கப்பட்டுவிட்டதாக மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் போலியானதாகும். கல்வியையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்த வேண்டாம். புதிய ☞ 2

# ஜேவிபியின் படுகொலைகளுக்கே நீதிகோராத இந்த ஆளும்தரப்பு எப்படி தமிழருக்கு நீதி தரும்?

## அருட்தந்தை சக்திவேல் கேள்வி

**செம்மணியில் 400 இற்கும் அதிகமானோரை கொன்று புதைத்தோம் என்று கிரிசாந்தி குமாரசாமி படுகொலையின் பிரதான குற்றவாளியான சோமரத்னராஜபக்ச வழங்கிய வாக்குமூலத்தை அன்றைய அரசுத் தலைவர் சந்திரிக்காவும், இன்றைய அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவும் மூடிமறைத்தார்கள். தமிழர்கள் என்பதற்காகவே இவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஜேவிபி உறுப்பினர்களின் படுகொலைக்கு நீதி கோராத இந்த ஆளும்தரப்பு எவ்வாறு தமிழர்களுக்கு நீதி வழங்கும். வடக்கு மற்றும் கிழக்கில் இனப்படுகொலை நடந்தது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரான அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.**

**நீதிக்கான மக்கள் சக்தி அமைப்பினர் கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக நேற்று வியாழக்கிழமை 'செம்மணி சமூக படுகொலைக்கு எதிராக எழுச்சிக்கொள்வோம்' என்பதை வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தில்** ☞ 2

## ஹெகலிய குடும்பம் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

கறுப்புப்பண சுத்திகரிப்பு சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அவரது மனைவி 3 மகள்மார் மற்றும் மருமகன் ஒருவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகிர்வு பத்திரம் கையளிக்கப்பட்டது.

இந்த குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் இவ்வாறு ☞ 3

## ஷாருக்கான் வரமாட்டார்

தெற்காசியாவின் முதலாவது ஒருங்கிணைந்த உல்லாச விடுதியான சிற்றி ஒவ் ட்ரீம் சிறிலங்கா (City of Dreams Sri Lanka) ஆரம்ப விழாவில் 'பொலிவுட் கிங் கான்' என்று அழைக்கப்படும் சூப்பர் ஸ்டார் ஷாருக்கான் கலந்துகொள்வது முக்கிய அம்சமாக திட்டமிடப்பட்டிருந்தபோதும் துரதிஷ்டவசமாக, எதிர்பாராத தனிப்பட்ட காரணங்களால், ஷாருக்கான் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் City of Dreams Sri Lankaவின் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், கானை ☞ 3

## அமெரிக்கா வரிச் சலுகை தராவிட்டால் இலங்கையுடனான ஓபந்த மீறல் அது

### ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு

இலங்கை அமெரிக்காவுடன் கடன் வழங்குனர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதால், அமெரிக்காவின் வரிக்கொள்கையின்போது இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இல்லாவிட்டால் அமெரிக்க ஒப்பந்தத்தை மீறியுள்ளதாகவே கருதப்படும் என முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பேராசிரியர் சரத் ராஜபத்திரனா எழுதிய இலங்கையில் உலகமயமாக்கலின் கொள்கை சவால்கள் புத்தக வெளியீடு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதனபோது அங்கு இடம்பெற்ற குழுக்கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அமெரிக்காவின் கடன்வழங்குனர் குழுவின் உறுப்பு நாடாகும். அதனால் அமெரிக்காவின் வரிக்கொள்கையின்போது இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அமெரிக்கா இலங்கையின் உத்தியோகபூர்வக் கடன் வழங்குனர் குழுவின் உறுப்பு நாடு என்பதால், அவர்கள் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். அதனால் அவர்கள் இலங்கையுடன் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளவேண்டும்.

அமெரிக்காவுடன் கலந்துரையாடி இந்த 30 சதவீத வரியை குறைத்துக்கொள்ள முடியாவிட்டால், அமெரிக்கா எமது ஒப்பந்தத்தை மீறியுள்ளதாகவே கருத்தப்படும். ☞ 2

## கொழும்பு துறைமுக கொள்கலன் முனையத்தை தனியார் மயப்படுத்தும் குற்றச்சாட்டுக்கு மறுப்பு

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை தனியார் மயமாக்கத் தயாராகி வருவதாக எழுந்த குற்றச்சாட்டுகளை, முழுமயாக மறுப்பதாக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதியமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜெயகொட அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் ஆளும்தரப்பு அரச சொத்துக்களை தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதற்கான நீண்டகால உத்தியின் ஒரு பகுதியாகவே கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனைத்தை மையப்படுத்திய பகுதியை தனியார் நிறுவனத்துக்கு கையளிப்பதற்கு அமைச்சரவை முடிவு எட்டப்பட்டுள்ளது குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் கிழக்கு முனையம் சார்ந்து புதிய தனியார் நிறுவனத்தை உருவாக்குவது, ஒட்டுமொத்த கிழக்கு முனையத்தையே தனிய-ஜார்மயமாக்குவதற்கான ஒரு இரகசியத் திட்டத்தின் முதற்படி என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் கருத்து வெளியிட்டுள்ள பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புதிதாக உருவாக்கப்பட்ட நிறுவனமான கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையம் (தனியார்) லிமிடெட் 100சதவீதம் துறைமுகத்திற்குச் ☞ 3

## அமைச்சர் விமல் ரத்நாயக்கவை கைது செய்து விசாரிக்கவேண்டும்

### தயாசிறி ஜயசேகர எம்.பி. வலியுறுத்து

கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பதில் ஆணையாளர் நாயகம் சீவலி அருட்கொட ஆகியோரை கைது செய்து முறையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தகவலறியும் உரிமை ☞ 3

## தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும்

### வலி. கிழக்கு பிரதேச சபையில் தீர்மானம்

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை எனவும் அவ் இனப்படுகொலைக்கு இலங்கை அரசு காரணம் என்ற நிலையில், இலங்கையின் உள்நாட்டு விசாரணைகளில் முற்றிலும் எமது மக்களும் நாமும் நம்பிக்கை இழந்துள்ளோம். இவ் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேசசபை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ☞ 3

## இனி இது .....

சுமத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. அதுவும் ஆட்சிக்கு வந்த ஆறேழு மாதங்களில் இருந்தே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டு, அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்பில் பங்கேற்பதற்கான எரிபொருளை இரண்டு இடங்களில் இருந்து பெற்றுவருகிறார்கள் என்பதாகும். 19 அமைச்சர்கள் மற்றும் துணை அமைச்சர்கள் இவ்வாறு இரண்டு இடங்களிலும் எரிபொருள்களைப் பெற்று வருகின்றார்கள் என்றும் நாடாளுமன்ற வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

பிரதமர் உட்பட 30 அமைச்சர்கள் மற்றும் துணை அமைச்சர்களுக்கு நாடாளுமன்றத்தில் இருந்து வழங்கப்பட்டுவந்த எரிபொருள் கொடுப்பனவே கடந்த ஏப்ரல் மாதம் முதல்தான் நிறுத்தப்பட்டது என்று நாடாளுமன்ற செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். அது வரையில் அவர்களும் இந்த இரட்டைக் கொடுப்பனவைப் பெற்று வந்திருக்கிறார்கள். இருப்பினும் இப்போதும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என 19 பேர் தொடர்ந்தும் இரட்டை எரிபொருள் கொடுப்பனவைப் பெற்றுவருகிறார்கள்.

இதற்கிடையில், மார்ச் மாதத்தில் மட்டும் சபாநாயகர், துணை சபாநாயகர், துணைக் குழுத் தலைவர் உள்ளிட்ட கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கொடுப்பனவுகளுக்காக எண்ணூறு மில்லியனுக்கும் அதிகமான ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மற்ற மாதங்களிலும் இதேயளவு தொகை செலவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு மாதாந்திர கொடுப்பனவு ரூ. 54,285, மாதாந்திர பொழுதுபோக்கு கொடுப்பனவு ரூ. 1,000, ஓட்டுநர் கொடுப்பனவு ரூ. 3,500, தொலைபேசி கொடுப்பனவு ரூ. 50,000, பயண கொடுப்பனவு 100,000 ரூபாயும், தனிப்பட்ட ஊழியர்களின் பயணச் செலவுகளுக்கு 15,000 ரூபாயும் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதற்கு நாளொன்றுக்கு ரூ. 2,500 ரூபாயும், நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறாத நாட்களில் நடைபெறும் குழு கூட்டங்களுக்கு ரூ. 2,500 ரூபாயும் கொடுப்பனவாக வழங்கப்படும்.

மேலும், உறுப்பினர் வசிக்கும் தூரத்திற்கு ஏற்ப எரிபொருள் வழங்கப்படுகிறது, அதன்படி, கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாதத்திற்கு 283.94 லிட்டர் எரிபொருளைப் பெறலாம் என்று வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 639.53 லிற்றர் எரிபொருளைப் பெறலாம்.

இந்த நிலையிலேயே சிலர் எரிபொருள் கொடுப்பனவுகளை இரண்டு இடங்களிலும் பெற்றுவருகிறார்களாம். அரசுத் தலைவர் இதற்கு என்ன செய்யப்போகிறார் என்று பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜேவிபியின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை இராணுவம் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வடக்கு மாகாணத்தை முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. இக்காலப்பகுதியில் கிரிசாந்தி குமாரசாமி என்ற பாடசாலை மாணவி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்படுகிறார். கொலை செய்யப்பட்ட தனது பிள்ளையை தேடி அவரது தாயாரும், சகோதரரும், பக்கத்து வீட்டுக்காரரும் செல்கிறார்கள். அவர்களும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த சம்பவம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இச்சம்பவத்தின் பிரதான சாட்சியாளரான சோமரத்ன ராஜபக்ச என்ற இராணுவ சிப்பாய் ‘செம்மணி பகுதியில் 400 இற்கும் அதிகமானோரை கொன்று புதைத்தோம்’ என்று வாக்குமூலமளித்துள்ளார். 400 இற்கும் அதிகமானோர் பலவந்தமான முறையில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். செம்மணியில் புதைக்கப்பட்டுள்ளார்கள்.

சோமரத்ன ராஜபக்ச என்பவர் தெற்கை சேர்ந்த சிங்களவர். இந்தச் சாட்சியத்தை முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க மற்றும் இந்நாள் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க ஆகியோர் மூடிமறைத்தார்கள்.

செம்மணி பகுதியில் கடந்த மாதம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது மனித எலும்புகூடுகள் கண்டுப்பிடிக்கப்பட்டு, பின்னர் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரையில் 60 இற்கும் மேற்பட்ட மனித எலும்புகூடுகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுப்பிடிக்கப்படும் மனித எலும்புக்கூடுகளில் பால்குடி குழந்தைகளினதும், சிறுவர்களினதும், எழும்புகூடுகள் காணப்படுகின்றன. எலும்புகூடுகளுடன் பாடசாலை புத்தகப்பை, கைபொம்மை, ஆகியன கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. இவர்களை பயங்கரவாதிகளாக்கியது யார், இவர்களை நாட்டுக்கு எதிரானவர்கள் என்று சித்தரித்தவர்கள் யார், தமிழர்கள் என்பதற்காக கொல்லப்பட்டார்களே தவிர பயங்கரவாதிகள் என்பதற்காகவல்ல, இதற்காகவே நாங்கள் நீதி கோருகிறோம்.

இழைக்கப்பட்ட அநீதிக்கு எந்த அரசாங்கங்களும் நீதியை வழங்காது என்பதை அறிவோம். முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சமாதான புறாவாக சித்தரிக்கப்பட்டார். ஆனால் அவர் யுத்தத்தை முன்னின்று நடத்தி கொலை செய்தார். மஹிந்த ராஜபக்ச இனப்படுகொலை செய்தார். ரணில், கோட்டபய, ஆகியோரும் இனபடுகொலையாளிகளே

செம்மணி இனப்படுகொலையின் சாட்சியாக உள்ளது. இனப்படுகொலை 90 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆளும்தரப்பு நீதியை பெற்றுக்கொடுக்காது ஏனெனில் இவர்கள் இராணுவத்துக்கு பயந்தவர்கள். அவர்களின் பாதுகாப்பில் வாழ்கிறார்கள்.

மாத்தளை பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களின் மனித புதைகுழி கண்டுப்பிடிக்கப்பட்டது. நாங்கள் இதற்கு நீதி கோரினோம். ஆனால் மக்கள் விடுதலை முன்னணி இதற்கு நீதி கோரவில்லை. தமது உறுப்பினர்களுக்கு நீதி கோராதவர்கள் தமிழ் மக்களுக்கு நீதி கோருவார்களா,

வடக்கு மற்றும் கிழக்கில் இனப்படுகொலை நடந்தது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழர்கள் என்பதற்காகவே இந்த கொலைகள் இடம்பெற்றன. நீதி கிடைக்க வேண்டுமாயின் சுயநிர்ணய உரிமை ஏற்கப்பட வேண்டும். அப்போது தான் நீதி கிடைக்கும் என்றார்.

## புதிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விச் சீர்திருத்தம் பற்றிய உண்மையான விடயங்களை அறிந்துகொண்ட அனைவரும் உண்மைநிலவரத்தைச் சமூகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என கல்வி உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சர் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

மேல் மாகாண கல்வித் துறை சார்ந்த உத்தியோகத்தர்களிடையே புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நேற்று மேல் மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதமர்

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் அழகியல் வரலாறு ஆகிய பாடங்களோடு தொழில்சார் பாடமும் கட்டாயமாகக் கற்கப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும் இந்த தேசிய வேலைத்திட்டம் குறித்த சரியான ஆய்வை மேற்கொள்ளாத சிலர் வரலாறு மற்றும் அழகியல் கல்வி நீக்கப்பட்டுவிட்டதாகப் பொய்ப் பரப்புரை செய்து வருகின்றனர்.

மேற்கண்ட பாடங்கள் தொடர்பாகப் பாட நிபுணர்களுடன் பல நாட்கள் கலந்துரையாடி அனைத்து மாணவர்களிடமும் வரலாறு குறித்த அறிவையும் மனிதநேயம் குறித்த குணாதிசயங்களையும் வளர்க்க உதவும் அழகியல் கல்வியைக் கற்கும் வாய்ப்பு கிடைக்கும் வகையிலேயே இந்த கல்விச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாம் அரசியல் செய்வோம். ஆனால் கல்வியையும் குழந்தைகளையும் அதன் பால் ஈர்க்காமல் இருப்போம்

இந்தக் கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் இந்தப் பாடங்களை எவ்வாறு கற்க வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். தனது துறைக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாத தரமான சிறுவர்களை எவ்வாறு உருவாக்குவது என்பதைப் புரிந்துகொண்டே இந்தச் சீர்திருத்தத்தைச் மேற்கொள்வோம். ஆகவே புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய உண்மையான விடயங்களை அறிந்துகொண்ட அனைவரும் உண்மைநிலவரத்தைச் சமூகத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றார்..

## அரச....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய அப்போதைய ஆளும்தரப்பு கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தத்தை இரத்துச் செய்தது. இதனால் குறித்த நிறுவனத்துக்கு 80 மில்லியன் டொலர் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பல மாதங்களுக்கு பின்னர் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தத்தை மீண்டும் அமுல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எனக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது. இதன் பின்னர் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தம் மீண்டும் அமுல்படுத்தப்பட்டது.

அமைச்சின் செயலாளராக பதவி வகித்த சந்தர்ப்பத்தில் பிரசுரிக்கப்பட்ட ஒரு வர்த்தமானியை இரத்துச் செய்யுமாறு அப்போதைய அரசுத் தலைவர் என்னிடம் குறிப்பிடம்டார். அப்போது நான் முடியாது என்று குறிப்பிட்டேன். அதனைத் தொடர்ந்து சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டேன். என்னை சுகாதார அமைச்சின் செயலாளராக நியமித்ததை அப்போதைய சுகாதார அமைச்சர் விரும்பாத காரணத்தால் அந்த நியமனத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் பின்னரே அரசுத்தலைவரின் செயலாளராக அப்போதைய அரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டேன். ஆகவே அரச சேவையாளர்கள் எந்நிலையிலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இல்லையேல் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்றார்.

## ஆளும்தரப்பு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திசநாயக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, வசந்த சமரசிங்கவுக்கு எதிராக அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். முன்னாள் அரசுத் தலைவர்களான கோட்டபய ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவியிலிருக்கும்போதே தமது அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுத்துள்ளனர் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் நேற்று வியாழக்கிழமை முன்னிலையானதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு கடந்த மாதம் 2 ஆம் திகதி முறைப்பாடளித்தோம். ஆனால் இதுவரையில் அந்த முறைப்பாடு குறித்து எவ்வித விசாரணைகளையும் ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை.

இந்த கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பில் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் பிரதி அமைச்சர் ஜனித் ருவான் கொடித்துவக்கு ஆகியோர் இந்த கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் தாம் நன்கு அறிவோம் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். ஆனால் அரசுத் தலைவர் அரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட குழு அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னர் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கருத்துக்கு மாற்றீடாக தற்போது பேசுகிறார்கள்.

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் பணிப்புக்கு அமைவாகவே இந்த 323 கொள்கலன்களும் விடுவிக்கப்பட்டதாக சுங்கத்திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் சீவலி அருட்கொட குறிப்பிட்டார். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முறையாக செயற்படுமாயின் பிமல் ரத்நாயக்கவை கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டிருக்கவேண்டும்.

பழைய திருடர்களை பிடிப்பதில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வேலைபழுவாக இருப்பதால் புதிய திருடர்களை ஆணைக்குழு அலட்சியம் செய்கிறது. சோளம் வழங்கியவர்கள், கெரம் போட் விநியோகத்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் 323 கொள்கலன்களை விடுவித்தவர்களால் நாட்டுக்கு ஏற்பட்ட நிதி இழப்பு தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த ஆளும்தரப்பின் உறுப்பினர்களுக்கு சட்ட விலக்களிக்கப்பட்டுள்ளது. கொட்டாஞ்சேனை பாடசாலை மாணவியின் உயிரிழப்பு தொடர்பில் அந்த மாணவியின் தாயார் தேசிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர் மீது குற்றச்சாட்டை முன்வைத்தார். அவரைக் கைது செய்து விசாரணைகள் ஏதும் மேற்கொள்ளப்படவிலலை. மாறாக அந்த நபருக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

வீடுகொள்வனவு விவகாரத்தில் அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவரைக் கைது செய்யுமாறு கல்கிசை நீதிமன்றம் கடந்த உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் இதுவரையில் அவர் கைதுசெய்யப்படவில்லை.

முன்னாள் அமைச்சர் சந்திரசேனவின் சகோதரருக்கு எதிராக 2021 ஆம் ஆண்டு அப்போதைய அரசுத் தலைவர் கோட்டபய ராஜபக்சவின் ஆட்சியின் போதுதான் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஆகவே ஊழல் ஒழிப்புக்கு எதிரான செயற்பாடுகளை ஆளும்தரப்பு முன்னெடுக்குமாயின் தமது ஆளும்தரப்பின் ஊழல்வாதிகளுக்கு எதிராக அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

## அமெரிக்க வரி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு இருந்தாலும் இந்த 30 சதவீத வரியை நாங்கள் குறைத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது எது பொருளாதாரத்துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இலங்கை சர்வதேச பிணைமுறி வைத்திருப்பவர்களுக்கு அதன் கடன்களைத் தீர்க்க வேண்டும் என்று வாஷிங்டன் விரும்புகிறது. இருப்பினும், நமது பொருளாதாரம் சரிந்தால் இது சாத்தியமில்லை, எனவே, அ மரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள 30 சதவீத வரி தொடர்பில் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளின் போது இந்தக் கருத்தை எழுப்ப வேண்டும்.

பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பை செயல்படுத்த அமெரிக்கா ஏற்கனவே இலங்கையை வலியுறுத்தியுள்ளது - இந்தப் பிரச்சினை அந்த பரந்த உரையாடலின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். டிரம்ப் நிர்வாகத்தின் கீழ் வர்த்தக நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இப்போது இலங்கையை விட வேகமாக முன்னேறி வருகி ன்றன. ஆனால் இலங்கை தொடர்ந்து போராடி வருகிறது,

அத்துடன் , சீனா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவை உள்ளடக்கிய பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மை உடன் இலங்கை தீவிரமாக ஈடுபட வேண்டும். சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி, ஜப்பானின் ஆசிய-பசிபிக் மூலோபாயம் மற்றும் இந்தியாவின் இந்தியப் பெருங்கடல் கட்டமைப்புடன் ஒத்துப்போக வேண்டும்.

குறிப்பாக இன்றைய மாறிவரும் புவிசார் அரசியல் நிலப்பரப்பைக் கருத்தில் கொண்டு இலங்கை இந்த முயற்சிகளுக்குள் மூலோபாய ரீதியாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும், தற்போதைய உலகளாவிய ஒழுங்கில் வெற்றியாளர்களும் தோல்வியாளர்களும் உள்ளனர் - நாம் எங்கு நிற்கிறோம் என்பதைத் தேர்வுசெய்யும் அளவுக்கு நாம் புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும் என்றார்.

இதன்போது, ஊடகவியலாளர் ஒருவர், அமெரிக்காவை கையாள்வது குறித்து தற்போதைய அரசாங்கத்திற்கு நீங்கள் வழங்கும் ஆலா சனை என்ன என்று கேட்டபோது, அவர்களுக்கு தெரிவிக்க என்னிடம் ஆலாசனை இல்லை, ஏனெனில அவர்கள் எனது ஆலாசனைகளை கேட்கமாட்டர்கள் என்றார்

காலைக்கதிர் Kalaikkathir

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவில் முன்னிலையானதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்களின் பெயர் விவரங்களை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அண்மையில் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். 2008 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஆட்சியில் இருந்த ஆளும்தரப்பின் போது அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து நிதி பெற்ற அரசியல்வாதிகளின் பெயர் விவரங்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டன.

2004 முதல் 2008 வரையான காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த ஆளும்தரப் பின் நிர்வாகத்தின் கீழ் அரசுத் தலைவர் நிதியத்திலிருந்து நிதி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் ஏதும் வெளிப்படுத்தப்படவில்லை. 2004-2008 ஆம் ஆண்டு ஆளும்தரப் புக்கு மக்கள் விடுதலை முன்னணியின் 39 உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினார்கள். இவர்களும் அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து நிதி பெற்றுள்ளார்கள். அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ 2004-2008 வருட காலத்தின் விவரங்களை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தவில்லை.அவ்வாறாயின் இதில் ஏதேனும் முறைகேடு இடம்பெற்றுள்ளது என்ற சந்தேகம் காணப்படுகிறது.

2004-2008 வரையான காலப்பகுதியில் அரசுத் தலைவர் நிதியத்தில் இருந்து நிதி பெற்றுக்கொண்டவர்களின் விபரங்களை தகவலறியும் உரிமை சட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு கடந்த 05 மாதமாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். ஆனால் இதுவரையில் எனக்கு அறிக்கை கிடைக்கவில்லை.

சுயாதீனதகவலறியும்ஆணைக்குழுவை மரணப் படுக்கைக்கு கொண்டு செல்லவே ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. தகவலறியும் ஆணைக்குழுவின் தலைவர் பதவி கடந்த மார்ச்மாதத்தில் இருந்து வெற்றிடமாகியுள்ளது. அத்துடன் ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையிலும் உறுப்பினர் பற்றாக்குறை காணப்படுகிறது.

இந்த ஆளும்தரப்பு தகவலறியும் உரிமைச்சட்டத்தை வலுவற்றதாக்குவதற்கு முயற்சிக்கிறது. சுயாதீன தகவலறியும் ஆணைக்குழுவின் அதிகாரங்களை மலினப்படுத்தும்வகையிலான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகிறது. அரச நிறுவனங்களில் தகவல் கோரப்படும் பட்சத்தில் அவை மறுக்கப்படுகின்றன.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு குறிப்பிட்ட விடயங்களுக்காக நானும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலமளித்துள்ளோம்.

இந்தக் கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் ஆராய்வதற்கு அரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட குழு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அந்த அறிக்கையில் சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை முறையற்ற செயற்பாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பதில்ஆணையாளர்நாயகம்சீவலிஅருட்கொட ஆகியோரை கைது செய்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். குற்றச்செயலுடன் தொடர்புடையவர்களை விசாரிக்காமல், குற்றத்தை வெளிக்கொண்டு வந்தவர்களை விசாரிப்பது சட்டத்துக்கு முரணானது என்பதை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விளங்கிக்கொள்ளவேண்டும் என்றார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொந்தமானநிறுவனமாகும்.இந்தநடவடிக்கை செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுவொரு தனியார்மயமாக்கல் அல்ல. இதுவொரு வணிக மாதிரியாகும். கிழக்கு கொள்கலன் முனையத்தை மிகவும் திறமையாகவும் இலாபகரமாகவும் இயக்குவதே எமது குறிக்கோளாகும். கிழக்கு முனையத்தினை நாங்கள் ஒருபோதும் தனியார் மயமாக்கப்போவதில்லை என்றார்.

கிழக்கு கொள்கலன் முனைய முகாமைத்துவம்மற்றும்தொழில்பாடுகளுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு முழு உரித்துடை பொறுப்புக்கள்வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றைநி-றுவுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் வரையறுக்கப்பட்ட கொழும்பு கிழக்கு கொள்கலன்முனைய (தனியார்) கம்பனி என்னும் பெயரில் முன்னெடுத்துச் செல்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழினப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வலிகாமம் கிழக்குபிரதேசசபையின்இரண்டாவதுஅமர்வு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இவ் அமர்வில்தவிசாளர்தியாகராஜாநிரோஸினால் இத் தீர்மானம் முன்வைக்கப்பட்டபோது, அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் உறுப்பினர்களின் வரவேற்பினைப் பெற்று தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தினை முன்வைத்து தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உரையாற்றுகையில்,

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்புகளால் வரலாற்று ரீதியில் நாம் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். எம் மீதான இனப்படுகொலை அரச கொள்கையாக இடம்பெற்றுள்ளது. எமது பூர்வீக தாயகமான வடக்குக் கிழக்கில் நிலங்கள் திட்டமிடப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பௌத்த சிங்கள பேரினவாத விஸ்தரிப்பு முயற்சியாக எமது மொழி உரிமை மறுக்கப்பட்டது. தமிழ் மக்கள் என்ற காரணத்திற்காக சொந்த மண்ணிலேயே அரச ஒத்துழைப்போடும் அனுசரனையோடும் ஏவுதலோடும் வன்செயல்கள் வாயிலாகவும் இராணுவ நடவடிக்கைகள்வாயிலாகவும்சுதந்திரத்திற்குப் பின் தமிழர்கள் கொன்றழிக்கப்பட்டனர். தமிழர்களைக் கொன்றால் குற்றமில்லை என்றஆட்சியாளர்களின்உத்தியோகப்பற்றற்ற ஆதரவு அரசினால் அளிக்கப்பட்டது. தமிழ் மக்கள் மீது முடுக்கிவிடப்பட்ட பாரதூரமான மனிதஉரிமைமீறல்களுக்குதண்டனைகளில் இருந்து விலத்தளிக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறல் இடம்பெறவில்லை.

தமிழ் பெண்கள் அரச படைகளால் பாலியல்வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுகொன்று புதைக்கப்பட்டனர். இதற்கு செம்மணி தக்க சான்று. இன்றும் மீட்கப்படும் புதைகுழிகள் மீது சர்வதேச விசாரணை அமையுமாயின் பல உண்மைகளை அவை வெளிப்படுத்தும். தமிழ் இனமாகப் பிறந்தார்கள் என்ற அடிப்படையில் எமது கல்வி உரிமை வரலாற்றில் மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சர்வதேசத்தினால் காட்டுமுராண்டிச்சட்டம்என இனங்காணப்பட்ட சட்டங்கள் வாயிலாக ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பல தசாப்தங்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இன்றும் அரசியல் கைதிகளாக மீதமுள்ளவர்கள் விடுதலைக்காக ஏங்குகின்றனர். அரச படைகளால் வலோத்காரமாகக் கொண்டு செல்லப்பட்டவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்களது விடுதலையை கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் தெருக்களில் வருடக்கணக்கில் போராடிக்கொண்டுஇருக்கின்றனர். சிறுவர்கள் பாடசாலை வளாகங்களுக்குள் வைத்தே அரச படைகளால் குண்டுகள் வீசப்பட்டு வீசி படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவமயமாக்கத்தினுடாக பௌத்த சிங்கள பேரினவாதம் காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் பூர்வீக தாயகத்தில் விஸ்தரிக்கப்பட்டு வந்துள்ளது. தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வித சட்ட ரீதியான அணுகுமுறைகளும் இன்றி இராணுவ அதிகாரம் கொண்டு கையகப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இன்றும் பல நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. தமிழ் மக்களின் வரலாற்றுத் தாயகம் திட்டமிட்ட அரச தாபனங்கள் ஊடாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. நாட்டில்போர்க்காலத்திலும் போருக்குப்பின்னும்பலமனிதப்புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டுஏராளமானஎலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு உள்நாட்டில் நீதி கிடைக்கவில்லை. இறுதி யுத்தத்திலும் ஏனைய யுத்தத்திலும் போர்த் தர்மங்களையும் உலக நியதிகளையும் மனித உரிமைகளையும்மீறிஅரசுசெயற்பட்டுள்ளது. வகைதொகையின்றி இலட்சக்கணக்கில் மக்களை படுகொலை செய்துள்ளது.

உள்நாட்டில் உண்மைகளைகண்டறிந்து நீதியை வழங்க போதிய பொறிமுறைகளும் ஏற்புடைமையும் இன்றைய அரசிடமும் கிடையாது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கங்களும் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் நியாயமானகோரிக்கைகளைஅடக்குவதையும் நீதியை வழங்குவதாக சர்வதேசத்திடம் பொய்யான உத்தரவாதங்களை வழங்கி தமிழருக்கான நீதியை காலந்தாழ்த்தும் உத்திகளிலேயேஅரசுகவனம்செலுத்துகின்றது. காலந்தாழ்த்துதல்ஊடாகஎமதுநீதிக்கோரிக்கைஇ மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைஇ இனப்பிரச்சினைத்தீர்வு ஆகியவற்றை நீர்த்துப்போகச்செய்யும். தந்திரோபாயத்தினை இலங்கை கொண்டுள்ளது.

எமது இனம், மொழி, பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், வரலாறு, அடையாளம் அனைத்தும் திட்டமிடப்பட்டு உள்நாட்டில்அழிக்கப்பட்டுள்ளது. எனவேநாம் எம் மீது இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமைமீறல்கள்மற்றும்இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி ஒன்றே தீர்வைப் பெற்றுத்தரும் என்பதை அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் ஆணைக்குரிய இவ் உயரிய மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் ஆட்சி மன்றில் தீர்மானமாக எடுக்கின்றோம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

## ஹெகலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்கப்பட்டன.

பின்னர்பிரதிவாதிகள்6பேரும்50ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 10 இலட்சம் ரூபா சரீரப்பிணைகளிலும் செல்ல நீதிபதி அனுமதித்தார். மேலும் பிரதிவாதிகளுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்த நீதிபதி அவர்களது கடவுச்சீட்டுக்களை மன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அவரது மனைவி குசும் பிரியதர்ஷனி ஏபா வைஹேன மகள்மாரான சமித்ரி ஜயனிகா ரம்புக்வெல்ல சந்துலா ரமாலி ரம்புக்வெல்ல அமாலி நயனிகா ரம்புக்வெல்ல மருமகன் இசுரு புலஸ்தி பண்டார பொல்கஸ்தெனிய ஆகியோருக்கு எதிராகவே சட்டமா அதிபரால் இந்த குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மோசடி தடுப்பு சட்டத்தின் 65 (1) ஆம் அத்தியாயத்தின் கீழ் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உத்தரவின் கீழ் அச்சட்டத்தின் 18 (அ) அத்தியாயத்தின் கீழ் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 ஒகஸ்ட் 13 ஆம் திகதிக்கும் 2014 ஜூன் 24 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் 97 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோதமாக சொத்து குவிப்பில் ஈடுபட்டதாக இந்த குற்றப் பத்திரிகை ஊடாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

43 குற்றச்சாட்டுகளின் கீழ் இவ்வழக்கு கடந்த மாதம் (26) ஆம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு தொடர்பான மேலதிக சட்ட விசாரணைகள் நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதற்கமைய கறுப்புப்பண சுத்திகரிப்பு சட்டத்தின்கீழ்முன்னாள்அமைச்சர்கெஹலிய ரம்புக்வெல்ல அவரது மனைவி 3 மகள்மார் மற்றும் மருமகன் ஒருவருக்கு எதிராக குற்றப்பகிர்வு பத்திரம் கையளிக்கப்பட்டது.

பின்னர்பிரதிவாதிகள்6பேரும்50ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும் 10இலட்சம் ரூபா சரீரப்பிணைகளிலும் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

மேலும் பிரதிவாதிகளுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்த நீதிபதி அவர்களது கடவுச்சீட்டுக்களைமன்றில்ஒப்படைக்குமாறும் உத்தரவு பிறப்பித்தார். பிரதிவாதிகளின் கை விரல் ரேகைகளை எடுத்து அறிக்கைகளை பெற்றுக்கொள்ளவும் நீதிபதி உத்தரவிட்டார்.

## ஷாருக்கான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்பதற்காக நீங்கள் பலர் ஆவலுடன் காத்திருந்தீர்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், உங்கள் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமடைந்ததை எங்களாலும் நன்கு உணர முடிகிறது.

அவரதுஆதரவுக்கும்நல்லெண்ணத்திற்கும் நாங்கள் தொடர்ந்து ஆழ்ந்த நன்றியுடன் இருக்கிறோம், மேலும் எதிர்காலத்தில் கானை ளீஷ்மிதீ லிகூஞீ ம்ஷளழிதுவி றீஷஷ் ஸிழிஜவழிவுக்கு வரவேற்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

ஷாருக்கான்வருகைஇரத்தாகியிருந்தாலும், City of Dreams Sri Lankaவின் ஆரம்ப விழா ஒரு முக்கிய கொண்டாட்டமாக திட்டமிட்டவாறு விமர்சையாக நடைபெறும். உள்ளூர் மற்றும் சர்வதேச அளவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டதிறமையானகலைஞர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

அவர்களது விபரங்கள் அடுத்த சில நாட்களில் வெளியிடப்படும். எனவே, உலகத்தரம் வாய்ந்த பொழுதுபோக்கு இடமாக இலங்கையை உலகளவில் அங்கீகரிக்கச் செய்வதற்கான முக்கிய மைல்கல்லாக இந்த நிகழ்வை மாற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.' எனக் கூறினார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கடலுடன் இணைந்த அறிவின் அவசியம்

இலங்கை, நான்கு பக்கங்களிலும் கடல் சூழ்ந்த ஒரு தீவுநாடு. ஆனால் அதே கடல், இந்நாட்டின் பொதுமக்களின் உணவு பாதுகாப்புக்கும், பொருளாதார நலன்களுக்கும் துணை நிற்கும் வகையில் அரசியல் நோக்கிலும் அறிவியல் விழிப்புணர்விலும் சேர்த்துப் பயன்படுத்தப்படவில்லை என்பதே வருத்தத்திற்குரிய உண்மை. இது, சமீபத்தில் வெளிவந்த பல பன்னாட்டு ஆய்வுகள் மற்றும்சம்பவங்களால்மீண்டும்ஒருமுறைஎடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் உணவுப் பாதுகாப்பு அமைப்பின் (FAO) ஒத்துழைப்புடன், ஆய்வுக் கப்பல் ஒன்று கடந்த ஜூலை–ஒகஸ்ட் மாதங்களில் இலங்கை கடற்பரப்பில் மீன்வள மதிப்பீடு செய்ய திட்டமிடப்பட்டது. இது, இலங்கையின்மீன்பிடிவளங்களைகணக்கிட, எதிர்கால திட்டங்களை அமைக்க முக்கியமான தரவுகளைக் கொடுத்திருக்க வாய்ப்பு இருந்தது. ஆனால், இலங்கை அரசின் அனுமதித் தீர்மானத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, இந்த வாய்ப்பு கைநழுவிப்போனது. இது, ஒரு மாபெரும் தவறாகும். உணவுப் பாதுகாப்பிற்கும், நீண்ட கால நீர்வள மேலாண்மைக்கும் இத்தகைய தரவுகள் பெரிதும் தேவை.

சீனக் கப்பல்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழைவதற்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு ஆய்வு அனுமதிகளை வழங்குவதில் ஆளும்தரப்பு காட்டும் மந்தமான அணுகுமுறையே இந்த இழப்பிற்குக் காரணம். இந்தியாவின் தேவைகளுக்காக இலங்கை மக்களின் நலன்கள் பலியிடப்படுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இதற்கிடையே ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகம் (UWA), ஹார்வட் மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகங்களின் ஆய்வாளர்கள் இணைந்து நடத்திய ஓர் ஆய்வு, இந்தியப் பெருங்கடலில் இருந்து கிடைக்கும் மீன்கள் உலக மக்களுக்கு மிக முக்கியமான ஊட்டச்சத்துக்களை வழங்குகின்றன என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. உலகின் 12% காட்ஜ் மீன்களும், 30% கால்சியம், 20% விற்றமின் ஏ, 15% இரும்புச் சத்து, 13% விற்றமின் பி(ய)12 ஆகியவை இந்தியப் பெருங்கடலிலிருந்து கிடைக்கின்றன. இது, 800 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வாழும் இந்தப் பகுதியின் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கும் நீடித்த வாழ்வாதாரத்திற்கும் அத்தியாவசியமாகும்.

இந்த ஆய்வு மேலும் சுட்டிக்காட்டுவது, சிறிய மீன்கள், பெரிய மீன்களைவிட ஊட்டச்சத்து சதவிகிதத்தில் முன்னணியில் உள்ளன. இதைவிட வருத்தத்துக்குரியது, இந்த மீன்களைச் சிக்கலான முறையில் பிடிக்கும் வெளிநாட்டு பெரிய கப்பல்களும், இந்தியா போன்ற நெருங்கிய நாடுகளின் மீன்பிடி முறையும் இலங்கையின் கடல்சார் வளங்களை சூறையாடுகின்றன. இதன் மூலம், பொருளாதார மற்றும் ஊட்டச்சத்து வாய்ப்புகள் நாட்டிலிருந்து வெளியேறுகின்றன.

இந்நிலையில், இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்கும், வறுமை ஒழிப்புக்கும், கடல்வளங்களும் கடலறிவும் முக்கிய ஆதாரமாக இருக்க வேண்டியுள்ளது. ஆனால் கடந்த பல ஆளும்தரப்புகள் கடலின் அறிவியல் ஆய்விலும், கல்வியில் கடல் சார்ந்த நுட்ப திறன் வளர்ப்பிலும் கவனம் செலுத்தாததே இன்று இலங்கைசந்திக்கும் நெருக்கடிக்கு காரணமாகின்றது.

அரசமைப்பில் இலவச கல்வி, இலவச சுகாதார சேவைகள் போன்றவற்றை உறுதிப்படுத்தும்போது, கடலையும் அதன் வளங்களையும் அறிவுப் பார்வையில் அணுக வேண்டிய கட்டாயம் இன்று அதிகமாகியுள்ளது. அரசு மட்டுமின்றி, கல்வி நிறுவங்களும், மக்களும், மீனவர்கள் சமூகமும் இதற்குத் தயாராக வேண்டிய தருணம் இது.

பொருளாதார வளர்ச்சியை இலங்கை மிக வேகமாக வேண்டி நிற்கும் இந்த வேளையில், நிலப்பரப்புக்குள் நம் பார்வையை முடக்கிய நிலைமையிலிருந்து, கடலின் பசுமைச் சொத்தை பாதுகாக்கும் அறிவியல் அணுகுமுறையை நோக்கி நகர வேண்டிய காலகட்டம் இது. கடல்நிலங்கள், பசுமை பொருளாதாரம் (blue economy) வளர்ச்சியின் அடித்தளமாக மாற்றப்படவேண்டும். அதற்கான முதல் படி– தீர்க்கமான அறிவியல் புரிதலே.

இது உணவிற்கும், ஊட்டச்சத்துக்கும் மட்டுமல்ல; இலங்கையின் பாதுகாப்புக்கும், வர்த்தகத்திற்கும், எதிர்கால தலைமுறைக்குமான வாழ்வாதாரத்திற்கும் அத்தியாவசியம் என்பதை ஆளும்தரப்பும் மக்களும் உணரவேண்டும்.

# அந்த நாடகம், இந்த மேடையில்

**என். சத்திய மூர்த்தி**

வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ் மாகாணத்திற்கு, முதலும் கடைசியுமாக இருந்த ஒரே முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், தான் முன்பு அங்கத்துவம் வகித்த ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தற்போதைய தலைவர் சுரேஷ்பிரேமசந்திரனைச் சந்தித்துப் பேசியுள்ளார். இருவரும் மாகாண சபை தேர்தல் மற்றும் மறந்துபோய்விட்ட பதிமூன்றாவது திருத்த தீர்வுத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துவதற்கு அரசிற்கு அழுத்தம் கொடுப்பது குறித்தெல்லாம் பூர்வாங்க பேச்சு நடத்தியதாகச் செய்திகள் கூறுகின்றன. அதைத் தொடர்ந்து, இந்தப் பிரச்சினையில் அனைத்துத் தமிழ் தலைமைகளிடையே ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கும் சேர்ந்து செயல்படவும் இரு தலைவர்களும் முடிவு செய்திருக்கின்றனர் என்றும் பத்திரிகைகள் கூறியுள்ளன.

வரதராஜ பெருமாள், தற்போது ‘சமூக ஜனநாயக கட்சி‘ என்ற ஓர் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கிறார் என்று தெரிகிறது. அந்த வகையில், இந்த இரு தலைவர்களுடைய சந்திப்பும் அவர்களது கட்சிகளை இணைப்பதற்கு அச்சாரம் போடும் ஒரு நிகழ்வாக மட்டுமே காணப்படவேண்டியதில்லைஎன்றேதோன்றுகிறது. காரணம், எப்போது மீள் இணைப்பு என்றெல்லாம் பசப்புகிறார்களோ, அப்போதே அனைத்து மட்டங்களிலும் தலைமைத்துவத்திற்கான போட்டி தோன்றிவிடும். இது வழமையும்கூட.

இருவரில், வரதராஜ பெருமாள் யார் என்றுகூட இந்தத் தலைமுறை தமிழ் இளைய சமுதாயத்திற்குத் தெரியாது. விடுதலை புலிகள் அமைப்பினரால் ‘துரோகி‘ பட்டம் சூட்டப்பட்டு இந்தியாவில் வாழ்ந்து வந்த அவர், முன்பு ஒரு முறை, அரசியல் வெள்ளோட்டம் பார்க்க இலங்கை, குறிப்பாக வட மாகாணத்திற்கு வந்திருந்தார். அதைத் தொடர்ந்து அவ்வப்போது வந்து சென்றிருக்கிறார் என்பதும் தெரிகிறது.

2013 வட மாகாண சபை தேர்தலை ஒட்டியே அவரது முதல் வருகை அமைந்திருந்தது. அப்போதாவது அவரைத் தெருவில் கண்டு ‘துரோகி‘ என்று உரக்கக் கூவச் சிலர் இருந்திருப்பார்கள். தற்போது அவரை தமிழ் சமூகம் மறந்தேவிட்டது. அதுபோன்றே. தனது சவாடால் பேச்சுகளுக்கு அப்பால் சுரேஷ் பிரேமசந்திரனும் தேர்தல் அரசியலில் எதுவும் சாதித்துவிடவில்லை.

இன்று, இந்த இருவரையும் முன்னிலைப்படுத்தி, ஈ.பி.ஆர்.எல்.எவ்-வின் பல்வேறு பிரிவினர்களும் ஒருங்கிணைகிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம், அப்போதும் அவர்களால் தமிழ் வாக்காளர்களிடையே ஓர் எழுச்சியை தோற்றுவிக்க முடியாது. அவர்களில் பலரும் வயதில் மூத்தவர்கள். தற்போதைய தலைமுறையினருடன் ‘கனெக்ட்‘ செய்ய முடியாதவர்கள். அவர்களது இடதுசாரி சமூகப் -பொருளாதாரக கொள்கையை நம்பி இருந்த குறைந்த எண்ணிக்கையிலான தமிழ் வாக்காளர்களும் ஆளும் ஜேவிபி - -என்பிபி அணியினருடன் சென்று விட்டார்கள் என்று கருத இடமிருக்கிறது.

இல்லாமலும், இடதுசாரி தத்துவங்களை இன்றளவும், யாழ்பாண அரசியலை கண்ட்ரோல் செய்யும் உயர் தரப்பினர் ஏற்றுக்கொண்டதற்கு ஆதாரம் இல்லை. அதுபோன்றே, இவர்களுடைய முயற்சி அரசியல் ரீதியாக வெற்றி பெறுமேயானால், அவர்களைத் ‘துரோகி‘ என்றோ ‘மண்டையன் குழு‘ என்றோ வர்ணித்து தனிமைப்படுத்த இப்போதே பலரும் கத்தி தீட்டிக்கொண்டிருப்பார்கள் என்பது திண்ணம்.

### வெறும் கையால் முழம்

இது இப்படி இருக்க, செம்மணி மற்றும் பிற பொறுப்புகூறல் விடயங்களில் ஒருமித்த தமிழ் கருத்து உருவாக்குவதற்காக, தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் புதிதாக ஒரு முன்னெடுப்பைச் செய்ய இருக்கிறார் என்று அறிவித்துள்ளார். அதாவது 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை விவகாரத்தில் அனைத்துத் தமிழ் தரப்பினரும் ஒருங்கிணைந்து எடுத்த முயற்சியை நினைவுறுத்தி அடுத்த நகர்வுகளை தாங்கள் எடுக்கப்போகிறார்கள் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

கஜேந்திரகுமாரிற்கு அபார நினைவுதிறன். இல்லையென்றால், இவ்வாறு 2021ஆம் ஆண்டு கடிதத்தையும் அதன் உள்ளடக்கத்தையும் எல்லாம் நினைவு வைத்துக்கொண்டு செயல்படுவாரா என்ன? இல்லையென்று சொல்லாமல், இன அரசியல் குறித்த விடயங்களில், அவரது தலைமுறையினருக்கும் அவர்களது தந்தையர் தலைமுறையினருக்கும் அபார நினைவுதிறன் இருந்ததை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஆனால், அதனை தற்போதைய இளம் தலைமுறையினர் புரிந்து கொண்டுள்ளார்களா? அல்லது உணர்ந்துதான் இருக்கிறார்களா?

அவர்களைப் பொறுத்தவரையில் இவை எல்லாம் எந்தவொரு அரசியல், சமூகப் -பொருளாதார மாற்றங்களையும் அவர்களுக்குப் பெற்றுத் தந்துவிடவில்லை. விட்டுச்செல்லப் போவதில்லை. அவர்களது தேவையெல்லாம், எதிர்காலத்தைக் குறிவைத்து சமகாலத்தில் பெறக்கூடிய பலன்கள்.

தற்போதைய தலைமுறையினர் தங்களது முன்னோடிகளைப் போல், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அன்றாடம் பயன் தரும் விடயங்களில் எதனையும் இழந்துவிடவில்லை. அல்லது தமிழ் இனம் என்ற அடையாளத்தோடு அவர்கள் தங்கள் தலைமுறையில் பெற்ற பயன்களை தொலைத்துவிடவில்லை. எவ்வாறு இல்லாத ஒன்று குறித்து அவர்கள் உணர்ந்து, உணர்ச்சிபூர்வமாக மட்டுமே எண்ணிச் செயலாற்ற முடியும்? வெறும் கையை கொண்டு முழம் போடுவதால் யாருக்கு என்ன பயன்?

### மீண்டும் தனி ஆவர்த்தனம்

இதில், கஜேந்திரகுமார் கூறிய ஒரு விடயம் குறிப்பிடத்தக்கது. அண்மையில், இலங்கை, அதிலும் குறிப்பாக யாழ்பாணத்திற்கு வருகை தந்த ஐ.நா. மனித உரிமை ஆணையர் வோல்கர் டர்க்கிடம் அனைத்துத் தமிழ் தரப்பினரும் கையெழுத்திட்டு கொடுத்த மனுவில் தமிழ் அரசுக் கட்சியும் இணைந்திருந்ததாகவும் ஆனால், பின்னர் அவர்கள் மீண்டும் தனி ஆவர்த்தனம் வாசிக்கச் சென்றுவிட்டனர் எனவும் கூறி உள்ளார்.

மனித உரிமை ஆணையரிடம் சர்வதேச பொறிமுறை மூலம் செம்மணி புதைகுழி விவகாரத்திற்கும் சுதந்திரமான விசாரணைவேண்டும் என்று கோரிக்கை விடுத்த பின்னர், தமிழ் அரசுக் கட்சி மட்டும் குறுக்குசால் ஓட்டி உள்ளதாக கஜேந்திரகுமார் குற்றஞ்சாட்டி உள்ளார். அதாவது, மனித உரிமை ஆணையரிடம் மனு கொடுத்த பின்னர், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானமும் பொது செயலாளர் சுமந்திரனும் அரச தரப்பினருடன் தனியாக ஒரு புரிதலுக்கு வந்திருக்கிறார்கள் என்பது அவரது குற்றச்சாட்டு.

கஜேந்திரகுமாரின் கூற்றின்படி, செம்மணி உள்ளிட்ட பொறுப்புக் கூறல் விடயங்களுக்கு அரசே சர்வதேச மேற்பார்வையில் உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் சுதந்திரமான, விசாரணைகளை முன்னெடுக்கலாம் என்று தமிழ் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இது விடயத்தில் தமிழ் அரசின் இரண்டு மூத்த தலைவர்களும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயகவிற்கு எழுதிய கடிதம் ஒரு ரவுண்ட் வந்துள்ளது. இதன் உண்மைத் தன்மையை தமிழ் அரசுத் தலைமையே விவரிக்க முடியும். அல்லது விவாதிக்க முடியும்.

தொடர்ச்சி 5ம் பக்கம் ...........

# அந்த நாடகம்.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

## செல்லாக் காசு

இடைப்பட்ட காலத்தில், சில கேள்விகள் எழாமல் இல்லை. கஜேந்திரகுமார் கூறியது போல், சிவஞானமும் சுமந்திரனும் அரசுடன் ஒரு புரிதல் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றே வைத்துக்கொள்வோம், குறைந்தது, அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவில் மட்டுமாவது அதற்கு ஆதரவு இருக்குமா? மாறாக, கொள்கை ரீதியாகவும் தனிநபர் ரீதியாகவும் இதுபோன்ற கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத சிறீதரன் போன்றோர் இந்தப் பிரச்சினையை கையிலெடுத்து குறிப்பாக சுமந்திரனை உண்டு-இல்லை என்று பண்ணிவிடமாட்டார்களா?

தனது தற்போதைய முயற்சியில் அனைத்துத் தமிழ் தரப்பினரையும் உள்வாங்கப் போகிறார் எனவும் கேஜந்திரகுமார் கூறி உள்ளார். அவரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தமிழ் அரசுக் கட்சியின் அதிகாரபூர்வ தலைமைக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளாரா? அவ்வாறென்றால், அவர்கள் அடுத்த கூட்டத்தில் பங்கெடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறாரா? இல்லை, உள்ளாட்சி தேர்தல் பேச்சு தொடக்கத்தில் சிறீதரனை முன்னிறுத்தி தமிழ் அரசுடன் அரசியல் செய்தது போல் தற்போதும் செய்யப்போகிறாரா?

எது எப்படியோ, உள்ளாட்சித் தேர்தலில் பிற தமிழ் தரப்புகள் அனைத்தும் குட்டிக்கர்ணம் போட்டும், அவர்களால் பிளவுண்ட தமிழ் அரசுக் கட்சியை இல்லாமலாக்க முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால், மற்றப்படி செல்லாக்காசாகிப் போன தமிழ் அரசியல் மற்றும் சமூக தலைமைகளில் தமிழ் அரசு கட்சியே இன்னமும் மக்களின் ஆதரவை அதிகம் பெற்றுள்ளது என்பது மீண்டும் நிரூபணமாகி உள்ளது.

## சர்வதேச குற்றம்

இந்த பின்னணியில், செம்மணி உள்ளிட்ட போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் விடயத்தில், இலங்கை அரச தரப்புகளையும் கடந்த காலத் தலைமைகளையும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கு வழியில்லை, என்று பிரித்தானிய அயலுறவு அமைச்சர் டேவிட் லாமி அறிவித்துள்ளார். அந்நாட்டு நாடாளுமன்றத்தின் அயலுறவுக் குழுவில், இலங்கை தமிழ் வம்சாவளி உறுப்பினர் உமா குமரனின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினை மற்றும் பொறுப்பு கூறல் விடயங்களில், அடுத்தடுத்து ஆட்சியில் அமர்ந்துள்ள பிரித்தானிய ஆட்சிகள், தமிழர் ஆதரவுநிலையையே எடுத்து வந்துள்ளன. இன்னும் சொல்லப்போனால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை பொறுப்புகூறல் விடயங்களில், 'கோர் குரூப்' என்று அறியப்படும் உந்துசக்தி நாடுகளுக்கு தொடர்ந்து பிரித்தானியாவே தலைமைத்துவம் நல்கியும் வந்துள்ளது.

அதிலும் குறிப்பாக, முதலில் இந்த முன்னெடுப்புகளுக்கு 2012ஆ-ம் ஆண்டு காலகட்டம் தொடங்கி தலைமைத்துவம் வழங்கி வந்த அமெரிக்கா, அதிரடியாக அதிபர் டிரம்பின் முதலாவது நான்கு ஆண்டு காலத்தில், மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகிய பிறகு, பிரித்தானியாவே அந்தத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அந்த நாட்டின் அயலுறவு துறை அமைச்சரே, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் டேவிட் லெமியின் பதிலை வைத்துப் பார்க்கும்போது, நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும் என்று கோரிக்கை முன் வைத்திருப்பார் என்ற கருத்தே புலப்படுகிறது. இதே கோரிக்கையை மனித உரிமை ஆணையர் வோல்கர் தலைநகர் கொழும்பில் சந்தித்த சிறீதரனும் முன் வைத்திருந்தார் என்று பத்திரிகை செய்திகள் தெரிவித்தன.

அது சரி, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியாது என்று பிரித்தானிய அமைச்சர் அறிவித்ததன் காரணம்தான் என்ன? அவர் கூற்றுப்படி, இது குறித்த 'ரோம் சட்டத்தில்' கையெழுத்திட்டுள்ள நாடுகளை மட்டுமே ஐரோப்பாவில் நெதர்லேண்டு நாட்டில் செயல்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியும். இலங்கை, அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. எனவே, குறித்த சட்டத்தின் கீழ் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் குற்றவாளியாக நிறுத்த முடியாது.

இதற்கு முன்னர், இனப்போர் முடிந்த காலகட்டம் தொடங்கி, போர்க் குற்றங்களை 'இனப்படுகொலை' என்று அறிவிக்கவேண்டும் என்று தமிழ் தலைமைகள் பலவும் கூக்குரலிட்ட வண்ணம் இருந்தன. இதனையே அவர்களை வெளியில்இருந்துஆட்டுவிக்கும்புலம்பெயர்ந்தோர் அமைப்புகளும் கூறிவந்தன. ஆனால், சர்வதேச சட்டங்கள் மற்றும் முன்னோடி வழக்குகளின் அடிப்படையில் அந்தக் குற்றச்சாட்டை முன்னெடுத்து செல்லமுடியாது என்று சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அப்போது சுமந்திரனுக்கு கிடைத்தது 'துரோகி' பட்டம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாகப் போர்க் குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்கள் குறித்து தமிழ் தலைமைகளும் புலம்பெயர்ந்தோரும் கதைக்கும் போதெல்லாம், ஏனோ 'இனப்படுகொலை' என்ற பதம் இடம் பெறுவதில்லை. அந்த நிலைமைதான், தற்போதைய 'சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்' குறித்த கோரிக்கையும்.

சரி, சிறீதரனை விட்டுவிடுங்கள், பிரித்தானியா வாழ் புலம்பெயர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான உமா குமரனுக்குமா, சர்வதேச சட்டங்கள் குறித்து தெளிவான அறிவும் புரிதலும் இல்லையா? அப்படியில்லை என்றால், யாரை ஏமாற்ற இன்னமும் இந்த நாடகம்? கவிஞர் கூறி சென்றது போல், 'அந்த நாடகம், இந்த மேடையில் எத்தனை நாளாம்மா?'



காலைக்கதிர் Kalaikkathir

உ

முருகன் துணை

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# நாளை(19) சுவாமி விபுலானந்த அடிகளாரின் 78 வது மகா சமாதி தினம்

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 78 வது மகா சமாதி தினம் நாளை(19) சனிக்கிழமை ஆகும்.

அதேவேளை அவர் பண்டிதர் மயில்வாகனாக இருந்து சுவாமி விபுலானந்தரான அதாவது துறவறம் பூண்ட (1924–2024) நூற்றாண்டு விழா பரவலாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் ஓரங்கமாக நாளை(19) யாழ்ப்பாணத்தில் சுவாமியின் துறவற நூற்றாண்டுவிழா ஆரம்பமாகிறது.



Swami Vipulananda
சுவாமி விபுலானந்தர்
(1892 - 1947)
ஸ்தாபகர்: ராமகிருஷ்ண மிஷன், இலங்கை
Founder:Ramakrishna Mission, Sri Lanka

### யாழ்ப்பாணத்தில் வரலாறு காணாத முதல் விழா!

புத்தசாசன மற்றும் சமய விவகாரங்களுக்கான அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண பிரதேச செயலகம், அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் ஆகியன இணைந்து வரலாற்றில் முதல்முறையாக மாபெரும் துறவற நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாட இருக்கிறது .

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அனிருத்தனனின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜெகத் விக்ரமரத்ன கலந்து சிறப்பிக்க இருக்கிறார் .

மேலும்,புத்தசாசனமற்றும்சமயவிவரங்களுக்கான அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி மற்றும் பிரதி அமைச்சர் ஹமகெதற திசாநாயக்க ஆகியோரும் கலந்து கொள்கின்றார்கள் .

அத்துடன் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்கள் .

19ஆம்தேதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலிருந்து சுவாமிகளின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்வலம் காலை ஒன்பது மணிக்கு இடம் பெற இருக்கின்றது .

அதனைத்தொடர்ந்துமானிப்பாய்ஆலயடிச் சந்தியில் சுவாமிகளின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

அத்துடன் சுவாமிகள் அன்று அதிபராக இருந்த மானிப்பாய் இந்து கல்லூரியில் ஆரம்ப நிகழ்வுகள் காலையில் நடைபெற இருக்கின்றது.

19ஆம் தேதி மாலை 4 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்காதேவி மணிமண்டபத்தில் இசை அரங்கு இடம் பெற இருக்கின்றது .

மறுநாள் 20ஆம் தேதி காலையில் ஆய்வரங்கும் மாலையில் கலையரங்கும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, 19 மற்றும் 20 ஆகிய இரு தினங்களிலும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஓவியக் கண்காட்சி நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதின கலா மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

### தேசிய இன நல்லிணக்கம்?

இலங்கை எதிர்பார்க்கும் தேசியநல்லிணக்கம் எது? என்பதை 100 ஆண்டுகளுக்கு முன்பு தெரிவித்தவர் சுவாமி விபுலானந்த அடிகள்.

இலங்கை எதிர்பார்க்கும் தேசியநல்லிணக்கம்!

இலங்கையில் கல்விமுறைமை எப்படி அமைய வேண்டும்? இனநல்லிணக்கம் தேசியநல்லிணக்கம் எவ்வாறு அமையவேண்டும்? என்பதை இற்றைக்கு 100வருடங்களுக்கு முன்பே ஒரு தீர்க்கதரிசி சொல்லியிருந்தார்.

அவர்தான் அகிலம் போற்றும் உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ்வித்தகன் சுவாமி விபுலாநந்த அடிகளார். ஆம் உண்மையில் அவர் ஒரு தீர்க்கதரிசி.

அடிகளார் இவ்வவனியில் பிறந்து 133வருடங்களாகின்றன. அவர் பிறந்தது 1892.03.27 இல்.

20ஆம் நூற்றாண்டின் ஈடிணையற்ற பேறிஞர் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஆவார்.

அவரது எல்லையற்ற மேதாவிலாசம் காரணமாக உலகின் பல பாகங்களிலும்

அவர் பெயரில் பல அமைப்புகள் இயங்கிவருகின்றன.அவருக்காகபலநூல்கள்எழுதப்பட்டிருக்கின்றன. பல ஆய்வரங்குகள் நடாத்தப்பட்டிருக்கின்றன.

அவர் சிவபதமடைந்தது 19.07. 1947இல்.

### தேசிய நல்லிணக்கம் தொடர்பாக சுவாமி விபுலானந்த அடிகளார் அன்று சொன்னது:

‘ பலமொழிக்கல்வி தேசிய ஒருமைப்பாட்டையும் நாட்டினுள்ளும் நாடுகளிடையேயும் ஜக்கியத்தையும் உறுதிப்படுத்துகின்றது. சர்வதேச நல்லுறவையும் நன்முறையில்



விருத்திசெய்வதற்குப் பல மொழிகளை ஆண்களும் பெண்களும் கற்றல் வேண்டும்‘ என்றார்.

பலதரப்பட்ட பாசைகளைக் கற்பதனால் அறிவு விசாலிக்கும் என்றுகூறிய அவர்

பாடசாலைகளில் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு அப்பால் தொழிற்கல்வியையும் வழங்குவதேவிரிவுக்கல்வியாகும்.நல்லதிடகாத்திரமான உடல்நிலை உவப்பான உளவளர்ச்சி பன்பனவும் கட்டாயமானது என 1941இல் கூறினார்.

அதனால்தான் 1970களில் ஜேவிபி புட்சி அதனைத்தொடர்ந்து பிரதமர் ஸ்ரீமாவோ அம்மையார் இலங்கைமக்களை நாட்டுப்பற்றுடைய மக்களாக மாற்றவேண்டுமெனின் புதிய கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்தவேண்டுமென்றெண்ணி க.பொ.த. சா.த பரிட்சை நிறுத்தப்பட்டு பதிலாக தேசிய கல்விச்சான்றிதழ் எனும் புதிய பரிட்சை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

முக்கிய பாடங்களுடன் தொழிற்கல்வியும் உடற்கல்வியும் கவின்கலைகளும் கட்டாயபாடமாக்கப்பட்டன. இம்மாற்றம் முழுக்கமுழுக்க விபுலானந்த அடிகளாரின் கல்விச்சிந்தனையில் எழுந்ததே என்பதை யாரும் மறக்கமுடியாது.

விரிவுக்கல்வியில் பெரிதும் நாட்டமுள்ள தாகூர் காந்தி பிறந்த நாட்டினில் இன்னும் விரிவுக்கல்வி நடைமுறையில் இல்லையென்பது இவ்வண் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அப்படி இனங்கள் ஒன்றாக நல்லிணக்கத்துடனும் இனசௌயன்யத்துடனிருக்கவேண்டும் என்பதை அன்றே சிந்தித்தவர் சுவாமிகள். சிங்களமும் இஸ்லாமும் அறபும் சமஸ்கிருதமும் அவர் தோற்றுவித்த கல்லடி சிவானந்தாவில் கற்பிக்க ஏற்பாடுசெய்தவர்.காத்தான்குடிமுஸ்லிம்மாணவர்களும் பயிலவேண்டுமென்பதற்காக அவர் சிவானந்தாவை கல்லடியில் அமைத்தார்.

சுவாமியின் மகாசமாதி தினம் மற்றும் நூற்றாண்டு தின விழா சிறப்பாக அமைய இறைவனைப்பிரார்த்திப்போமாக.



**விபுலமாமணி வித்தகர் வி.ரி.சகாதேவராஜா** (M-Ed.)
ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், விரிவுரையாளர்,
காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவரும் இந்நாள் ஆலோசகரும்.
காரைதீவு.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




